
இவன்தான் அல்லாஹ்



ஆசிரியர்

S.கமாலுத்தீன் மதனி

இவன் தான் அல்லாஹ்

(வணக்கத்திற்கு தகுதியானவன்)

ஆசிரியர்

S.கமாலுத்தீன் மதனி

விலை ரூ.15/-

வெளியீடு :

ஹிரா பப்ளிகேஷன்

105, சந்தித் தெரு, இடலாக்குடி, கோட்டார்,

நாகர்கோவில் - 629 002.

94434 53943

அல்லாஹ் ஒருவனே இறைவன்

"அல்லாஹ் ஒருவனே! என்று சொல்வீராக!

அவன் படைப்புகள் எதன் மீதும் தேவையற்றவன், (அவன்பால் எல்லாம் தேவையுடையவை)

அவன் எவரையும் பெறவுமில்லை,

அவன் எவராலும் பெறப்படவுமில்லை,

மேலும் அவனுக்கு நிகராக யாருமில்லை எதுவுமில்லை.

(அல்குர்ஆன் : 112)

திருமறையின் தோற்றுவாய்

- அளவற்ற அருளாளன், நிகரற்ற கருணையாளன் அல்லாஹ்வின் பெயரால் துவங்குகிறேன்.

- அகிலங்கள் அனைத்தையும் படைத்து, வளர்த்து இரட்சிக்கின்ற அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்.

- அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற கருணையாளன்.

- அவன் நியாய தீர்ப்பு நாளில் அதிபதி.

- அல்லாஹ்வே! உன்னையே நாங்கள் வணங்குகிறோம், உன்னிடத்திலேயே உதவியும் தேடுகிறோம்.

- நீ எங்களுக்கு நேரான வழியை காண்பிப்பாயாக!

- அவ்வழி நீ யார் மீது அருள் புரிந்தாயோ அவர்கள் சென்ற வழி.

- அது உன் கோபத்திற்கு உரியோர் வழியுமல்ல, நெறி தவறியோர் வழியுமல்ல.

முகவுரை

கல்லிலும், மண்ணிலும், உலோகத்திலும், மரத்திலும் தன் கரத்தினால் வார்த்தெடுத்த சிற்பங்களை கடவுளாக மதித்து, அவற்றுக்கு முன் சாஷ்டாங்கம் செய்கின்ற மனிதர்களை அதிகம் பார்க்கின்றோம். அவற்றையெல்லாம் இறைவனாகக்கருதி, பல விதமான ஆற்றலும் இருப்பதாக நம்பி, தன்னுடைய எல்லாவிதமான தேவைகளையும் முறையிடுகின்றான் மனிதன். உண்மையாக அஞ்சி பயப்பட வேண்டிய இறைவனைப்பற்றி அறியாதவனாகவே இருக்கிறான். தான் சிரம் பணிவதற்கும், தான் வழிப்பட்டு மரியாதை செய்வதற்கும் தகுதியானவன் தன்னை விட மேலானவனாக இருக்க வேண்டும் என்பதை சிறிது கூட சிந்திக்காதவனாக இருக்கிறான். தன்னுடைய கரத்தினால் செதுக்கப்பட்ட உணர்வற்ற கல்லும், மரமும் உணர்வுள்ள பகுத்தறிவு வழங்கப்பட்ட தன்னை விடவும் மேலானதாக இருக்க முடியாது என்பதை புரியாமல், அவற்றுக்கு தன்னை அடிமையாக்கி விடுகிறான்.

எனவே, இப்படிப்பட்ட மனிதன் கொஞ்சம் சிந்தனையைச் செலுத்தி, தான் வணங்குவதற்கு தகுதியானவன் எப்படிப்பட்ட பண்புடையவனாக இருக்க வேண்டும் என்பதை சிறிது சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நான் வணங்கி வழிப்பட்டு மரியாதை செய்கின்ற இறைவன், என்னைப்படைத்திருக்க வேண்டும். என் முன்னோரையும் படைத்திருக்க வேண்டும், தாயின் வயிற்றிலிருந்து வெளியே வந்த பின்னர் எனக்கு தேவையான எல்லா விதமான வாழ்வாதாரங்களையும் படைத்திருக்க வேண்டும், குறிப்பிட்ட காலம் வரை வாழச் செய்கின்ற அதிகாரம் உள்ளவனாக இருக்க வேண்டும்.

இந்த பண்புகள் யாரிடமிருக்கிறதோ அவன் தான் இறைவனாக இருக்க முடியும். அவன் தான் வணக்கத்திற்கு தகுதியானவன் ஆவான், என்ற உண்மையை புரிய வைப்பதற்காகத்தான் படைத்தவனாகிய அல்லாஹ்வை அறிமுகப்படுத்துவதற்காக, அல்லாஹ்வைப் பற்றி அவனே அறிமுகப்படுத்தியுள்ள இறைவனிடம் இருக்க வேண்டிய பண்புகளில் சிலவற்றை இங்கு தொகுத்து வெளியிடுகின்றோம். வல்ல அல்லாஹ் இதைப்படிக்கின்றவர்களுக்கு பயனுள்ளதாக்கி, படைத்தவனை புரிந்து கொள்ளக்கூடியவர்களாக ஆக்கியருள்வானாக! படைப்புகளை வணங்குவதை விட்டும் மக்களை அல்லாஹ் காப்பாற்றுவானாக!

S.கமாலுத்தீன் மதனீ

அல்லாஹ்

அல்லாஹ்! அவன் யார்? அவன் எங்கு இருக்கிறான்? என்ன செய்து கொண்டிருக்கிறான்? அவன் எப்படிப்பட்ட தன்மைகளையுடையவன்? அவனுடைய ஆற்றல், அவனுடைய வல்லமை என்ன? அவனை பார்க்கமுடியுமா? அவனை பார்த்தவர்கள் உண்டா? அவனுக்கும், மனிதர்களுக்குமிடையிலுள்ள உறவு என்ன?

இது போன்ற வினாக்களுக்கு விடை தெரிந்து கொள்ளாமல் மனித சமுதாயத்தில் அதிகமானவர்கள் இருக்கிறார்கள், இவர்கள்தாம் அல்லாஹ்வைப்பற்றி தவறாகப் புரிந்து வைத்துள்ளனர். அல்லாஹ் என்பவன் மாற்று மதத்தவர்கள் பூஜித்து வழிபடுகின்ற சாமிகளைப் போன்று முஸ்லிம்கள் வணங்குகின்ற ஒரு சாமி தான் என்று புரிந்துள்ளனர். எனவே, அல்லாசாமி என்று சொல்லக் கூடியவர்களும் மாற்று மதத்தில் இருக்கிறார்கள். அல்லாஹ் - அது முஸ்லிம்களுக்கு மட்டும் உள்ள கடவுள் என்று பல மாற்று மதத்தவர்கள் தவறாகப் புரிந்து வைத்துள்ளனர். அல்லாஹ்வை நம்பி இருக்கின்ற முஸ்லிம்களில் பலர் கூட அவனைப் புரிய வேண்டிய விதத்தில் புரியாமல் இருக்கின்றனர். அதன் காரணத்தினால் தான் மார்க்கத்தின் பெயரால் ஏராளமான அனாச்சாரங்களை முஸ்லிம்கள் செய்து வருகின்றனர். இந்த அறியாமையை அகற்றுவது நம்மீது கட்டாயக் கடமையாகும்.

அல்லாஹ்வைப் பற்றி மனிதர்கள் தங்கள் மனம் போன போக்கில் விளக்கம் செய்வதைவிட, அல்லாஹ்வே தன்னைப் பற்றி, தான் எப்படிப்பட்டவன் என்பதை விளக்கியுள்ளதைத்தான் நம்பகமானதாக-ஆதாரப்பூர்வமாக எடுத்துக் கொள்ள முடியும். அல்லாஹ் தனது தூதர்கள் மூலமாக அருளிய வேதங்கள் மூலம் தன்னைப் பற்றி அறிவிக்கின்றவை மட்டும் ஆதாரப்பூர்வமானவை. அந்த வகையில் அல்லாஹ் தனது இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அருளிய வேதமாகிய திருக்குர்ஆனில் தன்னைப் பற்றி கூறியதை நாம் பார்ப்போம்.

அகிலத்தின் அதிபதி அல்லாஹ்

நமது கண்களுக்கு தெரிகின்ற, கண்களுக்கு அப்பாற்பட்ட பேரண்டமாகிய ஆகாய கங்கை எனும் சூரியவம்சம் முழுவதையும் எந்தவிதமான முன் உதாரணமும் இல்லாமல்-தானாக, தனது ஆற்றலினால், தனது நாட்டத்தினால் படைத்து, பரிபாலித்து வருகின்ற வல்லமை மிக்கவன் தான் அல்லாஹ். இதை அல்லாஹ் தனது பரிசுத்த வேதமாகிய திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் குறிப்பிடுகின்றான். "அகிலங்கள் அனைத்தையும் படைத்து வளர்த்து இரட்சிக்கின்ற நாயனாகிய அல்லாஹ்வுக்கே அனைத்து புகழும்."

அல்குர்ஆன் (1:1)

"நிச்சயமாக என்னுடைய வணக்கங்களும், என் வாழ்வும், என்னுடைய மரணமும் (அகிலங்களைப் படைத்து-வளர்த்து-காத்து-இரட்சிக்கின்ற-நாயனாகிய) அல்லாஹ்வுக்கே

அல்குர்ஆன்(6:162)

"இறைத்தூதர்கள் தங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்திய போது நாங்கள் அகிலத்தின் அதிபதியாகிய அல்லாஹ்வின் புறத்திலிருந்து அனுப்பப்பட்டவர்கள் என்றே கூறினார்கள்." அல்குர்ஆன் (26:16)

"இறைத்தூதர் மூஸா-மோஸே (அலை) அவர்கள் கொடுங்கோல் ஆட்சியாளனான பிர்அவ்னிடம் சென்று, "நான் அகிலத்தின் இரட்சகனிடமிருந்து அனுப்பப்பட்ட தூதர்" என்று சொன்னபோது; "அகிலத்தின் இறைவன் யார்?" என்று பிர்அவ்ன் கேட்டான். அதற்கு "நீங்கள் நம்பக்கூடியவர்களாக இருந்தால் வானங்களுக்கும், பூமிக்கும் இவ்விரண்டிற்குமிடையே உள்ளவற்றுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வே அகிலத்தின் அதிபதி" என்று கூறினார்.

அல்குர்ஆன் (26:23,24)

ஆறே நாட்களில் வானம், பூமி படைத்தவன் அல்லாஹ்

பிரம்மாண்டமான பேரண்டத்தையும், அதில் காணப்படுகின்ற கோடானு கோடி படைப்புகளையும் ஆறேநாட்களில் படைத்து முடித்தவன் தான் அல்லாஹ், "நிச்சயமாக உங்கள் இறைவனாகிய

அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். அல்குர்ஆன் (7:54)

"அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் அந்த இரண்டிற்கும் இடையிலிருப்பவற்றையும் ஆறு நாட்களில் படைத்தான்."

அல்குர்ஆன் (10:3, 11:7, 25:59, 32:4)

மண்ணிலிருந்து மனிதனை படைத்தவன் அல்லாஹ்

ஆதிமனிதன் ஆதத்தை மண்ணிலிருந்து படைத்தவன்தான் அல்லாஹ், "அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக ஈஸா (இயேசு) வின் உதாரணம், ஆதமின் உதாரணத்தைப் போன்றதே. அவன் அவரை மண்ணிலிருந்து படைத்தான். 'பின்னர் ஆகுக' எனக்கூறினான். அவர் ஆகிவிட்டார்." அல்குர்ஆன் (3:59)

"அல்லாஹ்வின் அத்தாட்சியில் உள்ளதுதான், அவன் உங்களை மண்ணிலிருந்து படைத்திருப்பதாகும். பின்பு நீங்கள், மனிதர்களாக பூமியின் பல பாகங்களில் பரவியதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்." அல்குர்ஆன் (30:20)

அல்லாஹ்தான் உங்களை மண்ணிலிருந்து படைத்து, பின்னர் இந்திரியத்திலிருந்தும், பின்னர் இரத்தக்கட்டியிலிருந்தும் உருவாக்கி; உங்களைக் குழந்தையாக வெளியாக்குகிறான். பிறகு நீங்கள் உங்கள் வாலிபத்தை அடைந்து; பின்னர் முதியோர்கள் ஆகிறீர்கள். இதற்கு முன்னர் இறந்து விடுவோரும் உங்களில் உண்டு. இன்னும் நீங்கள் ஒரு குறிப்பிட்ட தவணையை அடைவீர்கள். நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இதை உங்களுக்கு அறிவிக்கின்றான்."

அல்குர்ஆன் (40:67)

அற்ப நீரிலிருந்து படைத்தவன் அல்லாஹ்

ஆதிமனிதனாகிய ஆதமை மண்ணிலிருந்து படைத்துவிட்டு, அவரிலிருந்து அவருடைய ஜோடியாக ஹவ்வாவைப் படைத்து பின்னர் சந்ததிகள் பெருக்கம் ஏற்படுத்துவதற்கான வழிமுறையாக கணவன்-மனைவி உடலுறவு மூலம் இந்திரியம் பாய்ச்சப்பட்டு, அதன் மூலம் மனிதனைப் படைப்பவன்தான் அல்லாஹ்.

"அல்லாஹ் தான் படைத்துள்ள ஒவ்வொரு பொருளையும்

அழகாக்கினான். இன்னும் அவன் மனிதனின் படைப்பை களிமண்ணிலிருந்து ஆரம்பித்தான். பிறகு அற்பமான நீராகிய இந்திரியத்திலிருந்து அவருடைய சந்ததிகளை உண்டாக்கினான்.''

அல்குர்ஆன் (32:7)

மனிதன் எதிலிருந்து படைக்கப்பட்டான் என்பதை திரும்பிப் பார்க்கட்டும். குதித்து வெளியாகும் ஒருதுளி நீரான இந்திரியத்திலிருந்து அவன் படைக்கப்பட்டான். ஆணின் முதுகு தண்டிற்கும், பெண்ணின் நெஞ்செலும்புகளுக்கு இடையிலிருந்தே அது வெளியாகிறது. நிச்சயமாக, இதைச் செய்த அல்லாஹ் மனிதனை மீண்டும் உயிர் கொடுத்து எழுப்புவதின் மீதும் சக்தி பெற்றவன்.''

அல்குர்ஆன் (86:5,6,7,8)

தாயின் கருவறையில் பாதுகாப்புப் பெட்டகம் ஏற்படுத்தியவன் அல்லாஹ்

கணவன்-மனைவி உடலுறவு மூலம் கருவறையில் விந்து பாய, அதன் மூலம் கரு உருவாகி அது பலவிதமான மாற்றங்களை அடைந்து; மனித வடிவைப்பெறுகிறது. பின்னர் அதில் உயிர் ஊட்டப்படுகிறது. அன்று முதல், குழந்தைக்கு உணவளிக்கப்படுகிறது. இந்த மகத்தான வேலையை செய்யக்கூடியவன் அல்லாஹ்தான்.

``அல்லாஹ்தான் கருவறைகளில் தான் நாடியபடி உங்களை வடிவமைக்கிறான். அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறில்லை. அவன் யாரையும் மிகைத்தோனாகவும், விவேகமிக்கவனாகவும் இருக்கின்றான்.''

அல்குர்ஆன் (3:6)

``மனிதர்களே! இறுதி தீர்ப்புக்காக மீண்டும் நீங்கள் எழுப்பப்படுவீர்கள் என்பதில் நீங்கள் சந்தேகத்தில் இருப்பீர்களானால், அறிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக உங்களை முதலில் மண்ணிலிருந்தும், பின்னர், இந்திரியத்திலிருந்தும்; பின்பு 'அலக்' என்ற வடிவத்திலும் பின்பு உருவாக்கப்பட்டதும், உருவாக்கப்படாததுமான தசைகட்டியிலிருந்தும் நாம் படைத்தோம். உங்களுக்கு விளக்குவதற்காகவே இதனை அறிவிக்கின்றோம். மேலும், நாம் நாடியவற்றை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கர்ப்பப்பையில் தங்கச்

செய்கிறோம். பின்பு உங்களை குழந்தையாக வெளிப்படுத்துகிறோம். பின்பு, நீங்கள் உங்கள் வாலிபத்தை அடைகிறீர்கள். மேலும், இதற்கு இடையில் உங்களில் சிலர் மரணிப்பவர்களும் இருக்கிறார்கள்; வாழ்ந்து அறிவு பெற்ற பின்னர் ஒன்றுமே அறியாதவர்களைப் போல் ஆகிவிடக்கூடிய தளர்ந்த வயது வரை விட்டு வைக்கப்படுகிறவர்களும் உங்களில் இருக்கிறார்கள். இன்னும் நீங்கள் (தரிசாய் கிடக்கும்) வறண்ட பூமியைப் பார்க்கின்றீர்கள், அதன்மீது நாம் மழை நீரைப் பொழிய செய்து; அது பசுமையாகி வளர்ந்து, அழகான பல்வகை புல்பூண்டுகளை முளைப்பிக்கிது. இதைச் செய்யக்கூடியவனாகிய அல்லாஹ் அவன் தான் உண்மையானவன். அவன்தான் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான். நிச்சயமாக, அவனே எல்லாவற்றின் மீதும் பேராற்றல்மிக்கவன்.

அல்குர்ஆன் (22:5)

தாயின் மார்பில் மகத்தான உணவு உண்டாக்கியவன் அல்லாஹ்

தாயின் கருவறையிலிருந்து குழந்தை வெளியே வந்த உடனே, பச்சிளம் குழந்தைக்கு தேவையான அற்புதமான உணவை தாயின் மார்பகங்களில் உருவாக்குபவன்தான் அல்லாஹ். குழந்தை வெளியே வந்த உடன், சுடச்சுட தன் தாயின் மார்பகங்களிலிருந்து சுவையான உணவாகிய பாலை அது அருந்துகிறது. அல்குர்ஆன் (2:233)

அளவற்ற அருளாளன் அல்லாஹ்

நல்லவர்கள் கெட்டவர்களென பாகுபாடின்றி அத்தனை மனிதர்களும் வாழ்வதற்குத் தேவையான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக்கொடுத்தவன்தான் அல்லாஹ். மனிதர்களைப் படைத்து விட்ட காரணத்தினால் அவர்கள் உலகில் வாழும் காலம் வரை அவர்களுக்கென நிர்ணயித்த வாழ்வாதாரங்களை வழங்கிவிடுகின்றான். மனிதர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து உயிர் ஜீவன்களுக்கும் தேவையானவற்றைபடைத்து வழங்குகின்றவன்தான் அல்லாஹ். “அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற கருணையாளன்.”

அல்குர்ஆன் (1:2)

“உமது இறைவனின் அருளை இவர்களா பங்கிடுகிறார்கள்?

இவ்வுலக வாழ்வில் இவர்களுடைய வாழ்க்கைத் தேவையை இவர்களிடையே நாமே பங்கிட்டிருக்கிறோம். இவர்களில் சிலர், சிலரை ஊழியத்திற்கு வைத்துக்கொள்வதற்காக சிலரை சிலரை விட தரத்தில் நாம் உயர்த்தி இருக்கிறோம். உம்முடைய இறைவனின் அருள் அவர்கள் சேகரித்து வைத்துக் கொண்டிருப்பதை விட மேலானதாகும்.'' அல்குர்ஆன் (43:32)

நிகரற்ற கருணையாளன் அல்லாஹ்

அல்லாஹ், அவன் நிகரில்லா கருணையாளன். அவனுடைய கருணைக்கு அளவே இல்லை. அவனை நம்பி, அவனுடைய கட்டளைகளை மதித்து, அவனுக்குக் கட்டுப்பட்டு வாழக்கூடியவர்களுக்கு மகத்தான பாக்கியங்களை ஏற்படுத்தி வைத்துள்ளான். உலகிலும் அவர்களுக்கு வளமான வாழ்க்கையை வழங்குகிறான்.

``எவர்கள் நம்பிக்கைக் கொண்டு நற்செயல்களை செய்கிறார்களோ, அவர்களை நிச்சயமாக அல்லாஹ் சுவர்க்கத்தில் புகுத்துவான். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டேயிருக்கும். அங்கே பொன்னானலான கடகங்களும், முத்து ஆபரணங்களும் கொண்டு அவர்கள் அணிவிக்கப்படுவார்கள். அங்கு அவர்களுடைய ஆடைகளும் பட்டால் ஆனதாக இருக்கும்.''

அல்குர்ஆன் (22:23)

``தங்கள் இறைவனின் பொருத்தத்தைத் தேடி பொறுமையைக் கடைபிடித்து, தொழுகையையும் நிலைநிறுத்தி, நாம் அவர்களுக்கு கொடுத்ததிலிருந்து இரகசியமாகவும், பகிரங்கமாகவும் நல்லவற்றில் செலவு செய்து, நன்மையைக் கொண்டு தீமையைத் தடுத்து நிறுத்துகிறார்களோ, அவர்களுக்கு மறுமையில் சுவனபதி என்னும் வீடு இருக்கிறது. அது நிலையான சுவனபதிகளாகும், அதில் இவர்களும், இவர்களுடைய பெற்றோரில், மனைவிமார்களில், சந்ததிகளில் யார் நல்லவர்களாக இருந்தார்களோ, அவர்களும் நுழைவார்கள். வானவர்கள் ஒவ்வொரு வாயில் வழியாகவும் இவர்களிடம் வந்து ``நீங்கள் பொறுமையைக் கடைபிடித்ததற்காகவும், உங்கள் மீது சாந்தி, உண்டாவதாக. எனவே மறுமையின் வீடு உங்களுக்கு மிகவும் நல்லதாயிற்று!'' என்று கூறுவார்கள். அல்குர்ஆன் (13:22,23,24)

அகிலத்திற்கு அதிபதி அல்லாஹ்

அகிலங்கள் முழுவதும் தன் கட்டுப்பாட்டில் வைத்து ஆட்சி செய்பவன் தான் அல்லாஹ். ஆட்சியாளர்களுக்கெல்லாம் பெரிய ஆட்சியாளன். "அல்லாஹ்வே! ஆட்சிகளுக்கெல்லாம் அதிபதியே! நீ நாடியவருக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய். இன்னும் நீ நாடியவர்களிடமிருந்து ஆட்சியைப் பறித்தும் விடுகின்றாய். நீ நாடியவரை கண்ணியப்படுத்துகிறாய். நீ நாடியவரை இழிவுபடுத்துகிறாய். நன்மைகள் யாவும் உன் கைவசமே உள்ளன. அனைத்துப் பொருட்கள் மீதும் நிச்சயமாக நீ ஆற்றலுடையவனாக இருக்கின்றாய் என்று சொல்வாயாக!" அல்குர்ஆன் (3:26)

சூரியன்-சந்திரனை இயக்குபவன் அல்லாஹ்

உலகம் தோன்றிய நாள்முதல் இன்று வரை சூரியனையும், சந்திரனையும் இதர கோள்களையும் முறையாக கடுகளவும் மாற்ற மின்றி இயக்கிக் கொண்டிருப்பவன்தான் அல்லாஹ்.

"நிச்சயமாக, உங்கள் இறைவனாகிய அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறுநாட்களில் படைத்தான். பின்னர், அர்ஷில் நிலையானான். அவன் இரவைக்கொண்டே பகலை மூடுகிறான். அது வெகுவிரைவாக அதனைப் பின்தொடர்கிறது. இன்னும் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் தன் கட்டளைக்கு கட்டுப்பட்டவைகளாகப் படைத்தான். அறிந்து கொள்ளுங்கள். படைத்தலும், கட்டளையிடுதலும் அல்லாஹ்வுக்கே சொந்தம். அகிலங்களுக்கெல்லாம் இறைவனாகிய, அவற்றைப் படைத்து பரிபாலித்துப் பக்குவப்படுத்தும் அல்லாஹ்மிகவும் பாக்கி யமுடையவன்." அல்குர்ஆன் (7:54)

"அல்லாஹ், அவன்தான் வானங்களையும், பூமியையும் படைத்து வானத்திலிருந்து தண்ணீரை இறக்கி, அதைக்கொண்டு கனி வர்க்கங்களையும் உங்களுக்கு ஆகாரமாக வெளிப்படுத்தினான். இன்னும், தன் கட்டளையினால் கடலில் செல்ல கப்பலையும், ஆறுகளையும் உங்களுக்கு வசப்படுத்தித்தந்தான். (நாள்) தவறாமல், தம் வழியில் தொடர்ந்து செல்லுமாறு சூரியனையும் சந்திரனையும் அவனே உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். மேலும், அவனே

இரவையும், பகலையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான்.''

அல்குர்ஆன் (14:32)

இருளையும் ஒளியையும் படைத்தவன் அல்லாஹ்

''வான மண்டலத்தில் பல கிரகங்களை அமைத்து; அவற்றிற்கு இடையே ஒரு விளக்காக சூரியனையும், ஒளிர்கின்ற சந்திரனையும் உண்டாக்கினானே அவன் பாக்கியமுயைடவன். அவன்தான் இரவையும், பகலையும் அடுத்தடுத்து வருமாறு ஆக்கினான். சிந்திக்க விரும்புகிறவருக்கு அல்லது நன்றி செலுத்த விரும்புகிறவருக்கு (இதில் அத்தாட்சி உண்டு).'' அல்குர்ஆன் (25:61)

பலரக கனி வர்க்கங்களை உண்டாக்கியவன் அல்லாஹ்

மனிதர்கள் புசிப்பதற்காக பல்வேறு ருசிகளில் காலச்சூழ்நிலைக்கேற்ப விதவிதமான பழவர்க்கங்களை உண்டு பண்ணியவன் தான் அல்லாஹ். ''படரவிடப்பட்டதும், படரவிடப்படாததுமான தோட்டங்களையும், பேரீச்சம் மரங்களையும், மாறுபட்ட உணவாக தானியங்களையும், தோற்றத்தில் ஒன்று போலவும், சுவையில் மாற்ற மானதுமான ஒலிவத்தை (ஸைத்தூனை) யும், மாதுளை கனியையும் அவனே படைத்தான். ஆகவே, அவை பலன் தரும்போது அவற்றிலிருந்து நீங்கள் புசியுங்கள். அவற்றை அறுவடை செய்யும் நாளில், அதிலிருந்து ஒரு பகுதியை ஏழைகளுக்கு கொடுத்துவிடுங்கள். வீண்விரையம் செய்யாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வீண்விரையம் செய்பவர்களை நேசிப்பதில்லை.'' அல்குர்ஆன் (6:141)

''இறந்து தரிசாகக் கிடக்கும் பூமி அவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும். மழையினால் அதனை நாம் உயிர்ப்பித்து, அதிலிருந்து தானியங்களை வெளிப்படுத்துகின்றோம். அதிலிருந்துதான் இவர்கள் உண்ணுகிறார்கள். மேலும், அதில் நாம் பேரீத்த மரங்ளினாலும், திராட்சைச் செடிகளினாலும் தோட்டங்களை உண்டாக்குகிறோம். இன்னும் அதில் நீருற்றுக்களை பீறிட்டு ஓடச் செய்கிறோம். அதன் பழவகைகள் அவர்கள் உண்பதற்காக நாம் இவ்வாறு ஆக்கினோம். அவர்களுடைய கைகள் இதை உண்டாக்கவில்லை. ஆகவே, அவர்கள் நன்றி செலுத்தவேண்டாமா?''. அல்குர்ஆன் (36:33-35)

வானங்களை தூணின்றி படைத்தவன் அல்லாஹ்

பரந்து விரிந்து காணப்படுகின்ற வானம் முகடு போன்று பூமியை மூடிக்கொண்டிருக்கிறது. பேரற்புதமாகக் காட்சி தருகின்ற பிரமாண்டமான வானம் என்ற கூடாரத்தை தூணின்றி தாங்கி நிற்பவன்தான் அல்லாஹ். "அல்லாஹ், அவன்தான் வானங்களைத் தூணின்றி உயர்த்தியுள்ளான். அதை நீங்கள் பார்க்கிறீர்கள்."

அல்குர்ஆன் (13:2)

"வானமும், பூமியும் அவனுடைய கட்டளையினால் நிலை பெற்று நிற்பதும், அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்."

அல்குர்ஆன்(30:25)

கணவன்-மனைவியரிடையே பாசப்பிணைப்பை ஏற்படுத்தியவன் அல்லாஹ்

எங்கோ பிறந்து; எங்கோ வளர்ந்து; ஆண், பெண் இருவரும் வாழ்க்கை ஜோடியாக ஆகி, இருவருக்கிடையில் இனம் புரியாத ஒருவித பாசமும் அன்பும் நிலவுவதைப் பார்க்கின்றோம். இந்த பாசப்பிணைப்பை ஏற்படுத்தியவன்தான் அல்லாஹ். இதை அல்லாஹ் கூறிக்காண்பிக்கும் போது, "நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுவதற்குரிய உங்கள் மனைவியரை உங்களிலிருந்து உங்களுக்காகவே அல்லாஹ் படைத்திருப்பதும், உங்களுக்கிடையே அன்பையும் பாசத்தையும் உண்டாக்கியிருப்பதும் அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்திக்கின்ற சமூகத்திற்கு நிச்சயம் இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன."

அல்குர்ஆன் (30:21)

மனித உருவங்களும் நிறங்களும் வடித்தவன் அல்லாஹ்

கோடிக்கணக்கான மனிதர்கள் மண்ணில் பிறந்து வாழ்ந்து மடிந்துவிட்டார்கள். கோடிக்கணக்கான மக்கள் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருடைய தோற்றமும், நிறமும் ஒவ்வொரு மாதிரி இருப்பதைக் காணலாம். எந்த வேறுபாடுமில்லாமல் ஒரே மாதிரியான இரு மனிதர்களை பார்க்க

முடிவதில்லை. இதைப்போன்றே உலகில் ஆயிரக்கணக்கான மொழிகளில் மக்கள் பேசுவதைப் பார்க்க முடிகிறது. இதையெல்லாம் ஏற்படுத்தியவன்தான் அல்லாஹ். “வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதும், உங்களுடைய மொழிகளும், நிறங்களும் வேறுபட்டிருப்பதும், அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். நிச்சயமாக, இதில் அறிவுடையோருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன.” அல்குர்ஆன் (30:22)

தூக்கத்தை ஏற்படுத்தியவன் அல்லாஹ்

இரவிலும், பகலிலும் மனிதனுக்கு தூக்கம் ஏற்படுவதைப் பார்க்கின்றோம். இந்த தூக்கம் யாரால் எப்படி ஏற்படுகிறது என்று சிந்தித்துப் பார்க்கக்கூடிய மக்கள் மிகமிகக் குறைவு. இந்த தூக்கத்தை ஏற்படுத்த கூடியவன் தான் அல்லாஹ். “இரவிலும் பகலிலும் நீங்கள் உறங்குவதும் அவனுடைய அருளிலிருந்து நீங்கள் தேடுவதும் அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் உள்ளவையே! செவியுறும் சமூகத்திற்கு நிச்சயமாக இதில் அத்தாட்சிகள் இருக்கின்றன.”

அல்குர்ஆன் (30:23)

“அல்லாஹ்தான் உங்களுக்கு இரவை ஆடையாகவும், நித்திரையை இளைப்பாறுதலாகவும் ஆக்கியிருக்கின்றான். இன்னும், அவனே பகலை உழைப்பதற்கு ஏற்றவாறு மீண்டும் எழுவதற்காக ஆக்கியிருக்கின்றான்.” அல்குர்ஆன் (25:47)

“உங்களுடைய தூக்கத்தை இளைப்பாறுதலாக நாம் ஆக்கினோம்.”

அல்குர்ஆன் (78:9)

இடி, மின்னல் ஏற்படுத்தியவன் அல்லாஹ்

மழை பெய்வதற்கு முன்பாக பயங்கரமான இடியும், மின்னலும் ஏற்படுகிறது. இதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இது எப்படி ஏற்படுகிறது. என்பதை அறிந்து கொள்ளமுடியாமல் அறிவாளிகள் திகைத்துப் போயிருக்கிறார்கள். அதை ஏற்படுத்தியவன் தான் அல்லாஹ். “பயமூட்டக்கூடியதாகவும், ஆதரவு தரக்கூடியதாகவும் மின்னலை அவன் உங்களுக்கு காண்பிப்பதும், வானத்திலிருந்து மழையை இறக்கிவைப்பதும், பின்னர் அதனைக் கொண்டு, இறந்து கிடந்த பூமியை விளைச்சல் மூலம் உயிர்ப்பிக்கச் செய்வதும்

அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். அறிவுடைய சமுதாயத்திற்கு இதில் அத்தாட்சிகள் (பல) இருக்கின்றன.

அல்குர்ஆன் (30:24)

“இடி, அல்லாஹ்வின் புகழைக் கொண்டும் வானவர்கள் அவனை அஞ்சியும் துதிக்கின்றனர். இன்னும் அவனே இடிகளை அனுப்பி அவற்றின் மூலம், தான் நாடியவரை பிடிக்கின்றான். இவ்வாறிருந்தும் அவர்கள் அல்லாஹ்வைப்பற்றி தர்க்கிக்கின்றனர். அவனே மிக்க வல்லமையுடையவனாக இருக்கிறான்.”

அல்குர்ஆன் (13:13)

வானத்திலிருந்து மழை பெய்யச் செய்பவன் அல்லாஹ்

வானத்திலிருந்து மழை பொழிவது மிகப்பெரிய அற்புதமாக இருக்கிறது. சிறிது நேரத்தில் எத்தனையோ கனஅடி தண்ணீர் வானத்திலிருந்து கொட்டுவதைப் பார்க்கின்றோம். ஒரு சில மணிநேரம் பொழிகின்ற மழையால் ஏரி, குளம் எல்லாம் நிரம்பி வழிகின்றன. கடுமையான மழை பெய்து விடுமானால் பேரழிவை ஏற்படுத்தி விடுகிறது. இவ்வளவு தண்ணீர் வானத்தில் எவ்வாறு தேங்கி நிற்கிறது? வானத்திலிருந்து மழையாக பொழிகின்ற காட்சி அற்புதமானது. வானத்தில் இந்த தண்ணீரை தேக்கிவைத்தது யார்? அவன்தான் அல்லாஹ்.

“மனிதர்களே! உங்களையும், உங்களுக்கு முன்பு வாழ்ந்தோரையும் படைத்த உங்கள் இரட்சகனாகிய அல்லாஹ்வை வணங்குங்கள். நீங்கள் பய பக்தியுடையோராக ஆகலாம். அவன்தான் பூமியை விரிப்பாகவும், வானத்தை முகடாகவும் ஆக்கினான். வானத்திலிருந்து மழையை இறக்கி; அதன் மூலம் பழவகைகளை உங்களுக்கு உணவாக வெளியாக்கினான். எனவே, இதையெல்லாம், நீங்கள் அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்காதீர் கள்.”

அல்குர்ஆன் (2:21)

பழங்களை ஜோடி ஜோடியாக படைத்தவன் அல்லாஹ்

ஒவ்வொரு பொருளும் ஜோடி ஜோடியாக படைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கின்றோம். இவ்வாறே பழங்களின் வகைகளையும் ஜோடி ஜோடியாக அல்லாஹ் படைத்திருக்கின்றான்.

"அல்லாஹ், அவன்தான் பூமியை விரித்து; அதில் உறுதியான மலைகளையும் ஆறுகளையும் உண்டாக்கினான். இன்னும் கனிகள் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டிரண்டாக ஜோடிகளை அதில் உண்டாக்கினான். நிச்சயமாக இவற்றில் சிந்திக்கும் மக்களுக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன." அல்குர்ஆன் (13:3)

ஆறுகளையும், நீர் ஓடைகளையும் ஏற்படுத்தியவன் அல்லாஹ்

நாம் வாழ்கின்ற இந்த பூமியில் எத்தனையோ விதமான பிரமாண்டமான ஆறுகளும், சுவையான நீரை சுமந்து செல்லும் நீரோடைகளும் உள்ளன. அவற்றை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அது எப்படி உண்டாகியது என்பதைப் பற்றியெல்லாம் சிந்திப்பதில்லை. அவற்றை ஏற்படுத்தித் தந்தவன்தான் அல்லாஹ்.

"அல்லாஹ்தான் வானத்திலிருந்து தண்ணீரை இறக்கினான். பின்னர் ஓடைகள் அவற்றின் அளவுக்கு தக்கவாறு நீரைக்கொண்டு ஓடுகின்றன. அவ்வெள்ளம் நுரையை மேலே சுமந்து செல்கிறது".

அல்குர்ஆன்(13;17)

தண்ணீர் மூலம் பல்வேறு சுவையை ஏற்படுத்தியவன் அல்லாஹ்

நிலத்தில் தண்ணீர் பாய்ச்சப்பட்டு, விவசாயம் செய்யப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு பழமும் வெவ்வேறு விதமான சுவையுடையதாக இருப்பதைப் பார்க்கின்றோம். இதை செய்தவன்தான் அல்லாஹ்.

"பூமியில் அருகருகே இணைந்தாற்போல பல பகுதிகள் உள்ளன. இன்னும் திராட்சைதோட்டங்களும், விளை நிலங்களும், கிளைகள்

உள்ளதும், இவை இல்லாததுமான பேரீச்சையும் உள்ளன. இவை அனைத்திற்கும் ஒரே தண்ணீர் கொண்டுதான் பாய்ச்சப்படுகிறது. எனினும், அவற்றில் சிலவற்றை வேறு சிலவற்றைவிட சுவையில் நாம் சிறந்ததாக ஆக்கியிருக்கின்றோம். நிச்சயமாக இவற்றில் விளங்குகின்ற சமூகத்தாருக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.''

அல்குர்ஆன் (13:4)

இணை இல்லாதவன் அல்லாஹ்

பிரமாண்டமான இந்த பேரண்டத்தைப் படைத்ததிலும், அதிலே கோடானுகோடி ஜீவராசிகளை உற்பத்தி செய்வதிலும், அவற்றையெல்லாம் இரட்சித்துக் காப்பதிலும் எந்தவித துணையுமின்றி தனித்து விளங்கக்கூடியவன் அல்லாஹ். இதில் அவனுக்கு இணையாக யாருமில்லை. "அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும், அவன் தனக்கு சந்ததியை எடுத்துக்கொள்ளவில்லை. அவன் ஆட்சியில் அவனுக்கு எந்தக் கூட்டாளியும் இல்லை. எவ்வித பலஹீனத்தைக் கொண்டும் எந்த உதவியாளனும் தேவையில்லாதவன். அவனை புகழ்ந்து அவனை பெருமைப்படுத்துவீராக''. அல்குர்ஆன் (17:111)

"அல்லாஹ்வையன்றி நீங்கள் பிரார்த்தித்து அழைக்கும் உங்கள் இணையாளர்களை நீங்கள் கவனித்தீர்களா? அவர்கள் பூமியில் எதை படைத்திருக்கின்றனர் என்பதை எனக்குக் காண்பியுங்கள். அல்லது வானங்களின் படைப்பில் அவர்களுக்கு ஏதேனும் கூட்டுண்டா? என்று அவர்களைக் கேளும்.'' அல்குர்ஆன்(35:40)

"நீங்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாதவற்றைக் கவனித்தீர்களா? பூமியிலுள்ள எதை அவை படைத்துள்ளன? அல்லது அவற்றுக்கு வானங்களில் ஏதாவது பங்கு உண்டா என்பதை எனக்குக் காண்பியுங்கள்''. அல்குர்ஆன் (26:4)

"இவையாவும் அல்லாஹ்வுடைய படைப்பாகும். அவனன்றி யார் எதைப்படைத்திருக்கின்றனர் என்பதை எனக்குக் காண்பியுங்கள் என்று கூறும். அவ்வாறல்ல, அநியாயக்காரர்கள் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருக்கின்றனர்''. அல்குர்ஆன் (31:11)

மனைவி-மக்கள் இல்லாதவன் அல்லாஹ்

அல்லாஹ், அவன்தானே உருவானவன். தனித்து விளங்குபவன். அவன் எந்த தேவையுமற்றவன். படைப்பினங்கள் அனைத்தும் அவன்பக்கம் தேவையுள்ளவை. மனைவி, மக்கள் இல்லாதவன். அவனுக்கு பிள்ளைகள் இல்லை. அவன் யாருக்கும் தந்தையுமில்லை. அவனுக்கு நிகராக யாருமில்லை. "அல்லாஹ் அவன் ஒருவனே!. அல்லாஹ் (எவரிடமிருந்தும்) தேவையற்றவன் அவன் எவரையும் பெறவுமில்லை. எவராலும் பெறப்படவுமில்லை. அவனுக்கு இணையாக எவரும் இல்லை." அல்குர்ஆன் (112:1-4)

ஒப்பு-உவமை இல்லாதவன் அல்லாஹ்

படைப்புகளில் யாரும் எதுவும் அல்லாஹ்வுக்கு ஒப்பில்லை. அவனை எதற்கும் ஒப்பாக்க முடியாது. காரணம் அவனுக்கு நிகராக எதுவுமில்லை. அவனைப் போன்று எதுவுமில்லை. அவன் உதாரணங்களுக்கு அப்பாற்பட்டவன். "நீங்கள், அல்லாஹ்வுக்கு உதாரணங்களைக் கூறாதீர்கள்". அல்குர்ஆன் (16:74)

"அல்லாஹ்வைப்போன்று எப்பொருளுமில்லை. அவன் யாவற்றையும் பார்ப்பவன். யாவற்றையும் செவியேற்பவன்".

அல்குர்ஆன்(42:11)

படைப்புகளை அழித்துவிட்டு, மீண்டும் உண்டாக்குபவன் அல்லாஹ்

ஒன்றுமே இல்லாதிருந்த நிலையில் இந்த பேரண்டத்தை உருவாக்கியவன்தான் அல்லாஹ். ஒரு நாளைக்கு அவன் எல்லாவற்றையும் அழிப்பான். மீண்டும் அவற்றை உருவாக்குவான். அதற்கு ஆற்றல் பெற்றவன்தான் அல்லாஹ்.

"அல்லாஹ்தான் படைப்பை துவங்குகின்றான். பின்னர் அவனே அதை மீட்டுகிறான். மேலும், இது அவனுக்கு மிகவும் எளிதேயாகும். வானங்களிலும், பூமியிலும் மிக்க உயர்ந்த வர்னனை அவனுக்குரியதே." அல்குர்ஆன் (30:27)

"அல்லாஹ் தான் உங்களைப் படைத்தான். அவனே பின்னர் உங்களை மரணிக்கச் செய்கிறான். பிறகு அவனே உங்களை

உயிர்ப்பிப்பான். இவற்றில் ஏதேனும் ஒன்றை செய்யக்கூடிய ஆற்றல் நீங்கள் இறைவனுக்கு இணையாக ஆக்கிக்கொண்ட தெய்வங்களிடம் உண்டா? அல்லாஹ் மிகவும் தூயவன். அவர்கள் இணை கற்பிப்பதை விட்டும் உயர்ந்தவன்.'' அல்குர்ஆன் (30:40)

''வானங்களையும், பூமியையும் படைத்தவன் அவர்களைப் போன்றவர்களைப் படைக்க சக்தி பெற்றவனாக இல்லையா?''

அல்குர்ஆன் (36:81)

மழைக்கு முன் காற்றை அனுப்புபவன் அல்லாஹ்

மழை பெய்வதற்கு முன்பாக குளிர்ந்த காற்றை சுப செய்தி கூறும் வகையில், அனுப்பி வைக்கக் கூடியவன்தான் அல்லாஹ்.

''தன்னுடைய அருளிலிருந்து உங்களுக்கு அவன் சுவைக்கச் செய்வதற்காகவும் நற்செய்தி கூறக்கூடியதாகவும் காற்றுகளை அல்லாஹ் அனுப்பிவைப்பது அவனுடைய அத்தாட்சிகளில் பட்டதாகும்.

அல்குர்ஆன் (30:46)

''அல்லாஹ்தான் காற்றுகளை அனுப்பி, அவற்றால் மேகத்தை ஓட்டி, பிறகு அதை தான் நாடியபடி வானத்தில் பரப்பி; பல துண்டுகளாகவும் ஆக்கிவிடுகிறான். அதன் இடையிலிருந்து மழை வெளியாவதை நீர் பார்க்கிறீர். பிறகு அதை தன் அடியார்களில் தான் நாடியவர்கள் மீது வந்தடையும்படி செய்கிறான். அப்போது அவர்கள் மகிழ்வடைகிறார்கள். மேலும் அவர்கள் மீது அம்மழை இறக்கப்படுவதற்கு முன்னர் மழையில்லாமல அவர்கள் முற்றிலும் நிராசையுடையோரோகவே இருந்தனர்''. அல்குர்ஆன் (30:48)

மனித வாழ்க்கையை பல கட்டங்களாக அமைத்தவன் அல்லாஹ்

மனிதன் கருவறையில் உருவாவது முதல், அவன் கருவறையிலிருந்து வெளியே வருவது வரை பல கட்டங்களாகவும், வெளியில் வந்தபின், அவனது வாழ்க்கை குழந்தைப் பருவம், வாலிபப் பருவம் வயோதிகப்பருவம், இயலாமைப் பருவம் என பல நிலைகளில் மாறுகிறது. இந்த மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவன்தான் அல்லாஹ். எந்த மனிதனாலும் இழந்து விட்ட இளமையை திரும்ப பெறவே முடியாது. இதுவே அல்லாஹ்வின் வல்லமைக்கு மிகப்பெரிய

சான்று.

“அல்லாஹ்தான் உங்களை ஆரம்பத்தில் பலவீனமான நிலையில் படைத்தான். பலவீனத்திற்குப் பின்னர் அவனே பலத்தை உண்டாக்கினான். அந்தப் பலத்திற்குப் பின் பலவீனத்தையும் நரையையும் அவனே ஆக்கினான். தான் நாடியதை அவன் படைக்கிறான். அவனே எல்லாம் அறிந்தவன். பேராற்றல் மிக்கவன்.”

அல்குர்ஆன் (30:54)

“அல்லாஹ் தான் உங்களைப் படைத்தான். பின்னர் அவனே மரணிக்கச் செய்கிறான். அறிந்த பின்பு எதுவுமே அறியாதவர்களைப் போல் ஆகிவிடக்கூடிய மிகவும் தளர்ந்த வயோதிகப்பவரும் வரையில் வாழ்ந்திருப்பவர்களும் உங்களில் உண்டு. நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் பேராற்றலுடையவனாகவும் இருக்கின்றான்.”

அல்குர்ஆன் (16:70)

தோல் ஆடையயை படைத்தவன் அல்லாஹ்

குளிர்காலங்களில் மனிதன் தன் மேனியை குளிரிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக கால்நடைகளின் தோல்களையும், அதன் ரோமங்களையும் ஆடைகளாக பயன்படுத்திக்கொள்ளும் விதத்தில் ஆக்கிக் கொடுத்தவன்தான் அல்லாஹ்.

“கால்நடைகளையும் அல்லாஹ் தான் படைத்தான். அவற்றில், உங்களுக்கு கதகதப்புள்ள ஆடைகளும் இன்னும் பல பலன்களும் இருக்கின்றன. அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கிறீர்கள்.”

அல்குர்ஆன் (16:5)

கால்நடைகளை சுமைதாங்கியாக ஆக்கியவன் அல்லாஹ்

கோவேறு கழுதை, குதிரை, ஒட்டகம் போன்ற கால்நடைகள் மனிதர்களின் பொருட்களை சுமந்து செல்லக்கூடியதாக ஆக்கினான்.

“நீங்கள் மிகவும் கஷ்டப்பட்டு சென்றடையக்கூடிய ஊர்களுக்கு உங்களுடைய சுமைகளை சுமந்து செல்லக்கூடியவையாக கால்நடைகளை ஆக்கினான். நிச்சயமாக, உங்களுடைய இறைவன்

மிகவும் இரக்கமுடையவன். அன்பு மிக்கவன், இன்னும் குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் ஆகியவற்றை நீங்கள் ஏறிச் செல்வதற்காகவும் அலங்காரமாகவும் அல்லாஹ்தான் படைத்துள்ளான். மேலும், நீங்கள் அறியாதவைகளையும் அவன் படைப்பான்''. அல்குர்ஆன் (16:7,8)

தாவரங்கள், பழங்களை படைத்தவன் அல்லாஹ்

மனிதர்களின் வாழ்க்கைக்குத் தேவையான தாவரங்கள், விதவிதமான காய்கறிகள், பழவர்க்கங்கள் ஆகியவற்றை காலச் சூழ்நிலைக்குத் தக்கவாறு உற்பத்தி செய்து கொடுப்பவன்தான் அல்லாஹ்.

''அல்லாஹ்தான் வானத்திலிருந்து நீரைப்பொழியச் செய்கிறான். அதிலிருந்து உங்களுக்கு அருந்தும் நீரும் இருக்கிறது. அதிலிருந்து வளரும் மரங்களும் உள்ளன. அதனைக் கொண்டே விவசாய பயிர்களையும், ஒலிவம் (ஸைத்தூன்) மரத்தையும், பேரீத்த மரங்களையயும, திராட்சை கொடிகளையும் இன்னும் எல்லாவகையான கனிகளிலிருந்தும் அவன் உங்களுக்காக விளைவிக்கின்றான். நிச்சயமாக இதில் சிந்திக்கும் கூட்டத்தார்களுக்குத் தக்க அத்தாட்சி இருக்கிறது.'' அல்குர்ஆன் (6:99)

ஓர் ஆத்மாவிலிருந்து மனித இனத்தை உருவாக்கியவன் அல்லாஹ்

''மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஓர் ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து அநேக ஆண்களையும், பெண்களையும் வெளிப்படுத்தி உலகில் பரவச்செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் தமக்கு உள்ள உரிமைகளை கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும், உங்கள் இரத்தக்கலப்புடைய உறவுகளை துண்டிப்பதையும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களை கண்காணிப்பவனாக இருக்கின்றான்.''

அல்குர்ஆன் (4:1)

பல நிறமுடைய பூமியைப் படைத்தவன் அல்லாஹ்

மனிதர்கள், தாங்கள் வசிக்கும் இடங்களைக் கட்டுவதற்காக பாறைக்கற்கைளயும், தங்கள் இல்லங்களை அலங்கரிப்பதற்கான வண்ண நிறங்களிலுள்ள கண்ணைக் கவருகின்ற அற்புதமான கிரானைட், மார்பிள்ஸ் இதைப்போன்ற விலைமதிக்க முடியாத நிவரத்தினக்கற்கள் ஆகியவற்றை பூமிக்கடியி ஏற்படுத்தியவன்தான் அல்லாஹ், ‘‘நிச்சயமாக, அல்லாஹ் வானத்திலிருந்து மழையை இறக்கி வைத்ததை நீர்பார்க்கவில்லையா? பின்னர் நாமே அதனைக் கொண்டு பலவிதமான நிறங்களுடைய கனிகளை வெளியாக்கினோம். மலைகளிலிருந்து வெண்மையானதும், சிவந்ததும், தன் நிறங்கள் பற்பல விதமானவையான பாதைகளும், சுத்த, கரிய நிறமுடையவையும் உள்ளன, இவ்வாறே மனிதர்களிலும் ஊர்வனவற்றிலும், கால்நடைகளிலும் பல நிறங்கள் இருக்கின்றன. நிச்சயமாக அவனது அடியார்களில் அல்லாஹ்வை அஞ்சுவதெல்லாம் அறிஞர்கள் தாம்.’’ அல்குர்ஆன் (35:27,28)

கடலை வசப்படுத்தித் தந்தவன் அல்லாஹ்

பூமியில் மூன்றில் இரண்டு பகுதிப்பரப்பளவு கொண்ட பிரம்மாண்ட மான கடல், அதில் பல்லாயிரக்கணக்கான மீன் வகைகள், முத்து-பவளங்கள், இன்னும் எத்தனையோ விதமான அற்புதப் படைப்புகளைப் படைத்து மனிதர்களுக்கு ஆகாரமாக ஆக்கிக் கொடுத்தவன் தான் அல்லாஹ்.

‘‘அல்லாஹ்தான் கடலை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். அதிலிருந்து மீன் போன்ற பசுமையான மாமிசத்தைப் புசிக்கிறீர்கள். நீங்கள் அணியக்கூடிய ஆபரணத்தை அதிலிருந்து நீங்கள் வெளிப்படுத்துகிறீர்கள். அதை அல்லாஹ்தான் வசப்படுத்தித்தந்தான். இன்னும் அதில் தண்ணீரைப் பிளந்து கொண்டு செல்லும் கப்பலை நீங்கள் காண்கிறீர்கள். அல்லாஹ்வுடைய அருட்கொடையை நீங்கள் தேடவும் நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் இவ்வாறு அவன் வசப்படுத்தித் தந்துள்ளான்.’’ அல்குர்ஆன் (16:14)

‘‘அல்லாஹ்வின் அருட்கொடையால் நிச்சயமாக கப்பல் கடலில் மிதந்து செல்வதை நீர் காணவில்லையா?

அவனுடைய அத்தாட்சியை உங்களுக்கு காண்பிப்பதற்காக இவ்வாறு செய்கிறான். இதில் பொறுமை மிக்க நன்றியுடைய ஒவ்வொரு மக்களுக்கும் அத்தாட்சிகள் இருக்கின்றன.''

அல்குர்ஆன் (31:31)

சுவையான பாலை உண்டாக்கியவன் அல்லாஹ்

ஆடு, மாடு, ஒட்டகங்களிலிருந்து பிறந்த குழந்தை முதல் முதியவர்கள் வரை அருந்துகின்ற கொழுப்பு சத்துள்ள சுவையான பாலை அந்த கால்நடைகளின் இரத்தத்திற்கும், அதன் சாணத்திற்கும் இடையிலிருந்து வெண்மையானதாக உருவாக்கித் தரக்கூடியவன்தான் அல்லாஹ். ''நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால்நடைகளிலும் தக்கப்படிப்பினை உள்ளது. அவற்றின் வயிற்றிலுள்ள சாணத்திற்கும், இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப்பற்ற பாலை அருந்துபவர்களுக்கு இனிமையானதாக இருக்க நாம் தாராளமாக உங்களுக்கு புகட்டுகின்றோம்.''அல்குர்ஆன் (16:66)

பழங்களில் இனிப்பை வைத்தவன் அல்லாஹ்

மனிதர்களுக்குத்தேவையான இனிப்பை, பழவர்க்கங்கள், கரும்பு போன்றவற்றிலிருந்து வெளியாக்கித்தந்தவன்தான் அல்லாஹ்.

''பேரீச்சை, திராட்சைப் பழங்களிலிருந்து மதுவையும், அழகான உணவையும் நீங்கள் உண்டாக்குகிறீர்கள். நிச்சயமாக இதிலும் சிந்திக்கும் மக்களுக்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது.''

அல்குர்ஆன் (16:67)

சுவையான தேனை உருவாக்கியவன் அல்லாஹ்

தேனீக்களின் மூலம் பலவிதமான நோய்களுக்கு நிவாரணமாக இருக்கின்ற அற்புதமான நிகரில்லாத தேனை தேனீக்களிலிருந்து வெளிப்படுத்தித் தந்தவன்தான் அல்லாஹ்.

உம் இறைவன் தேனீக்களுக்கு உள்ளுணர்வை அறிவித்து, ''நீ மலைகளிலும், மரங்களிலும் (மனிதர்கள்) கட்டுபவைகளிலும் கூடுகளை அமைத்துக்கொள் என்றும் எல்லாவிதமான கனிகளின் மலர்களிலிருந்தும் அருந்தி, உன் இறைவன் காட்டித்தரும் எளிதான வழிகளில் உன் கூட்டுக்குள் ஒடுங்கிச்செல் என்று கட்டளையிட்டோம்.

அதன் வயிற்றிலிருந்து பலவித நிறங்களுடைய ஒரு பானம் (தேன்) வெளியாகிறது. அதில் மனிதர்களுக்கு பிணி தீர்க்கவல்ல நோய் நிவாரணி உண்டு. நிச்சயமாக சிந்தித்து உணரும் மக்களுக்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது.'' அல்குர்ஆன் (16:68,69)

பார்வை, செவிபுலன்களைத் தந்தவன் அல்லாஹ்

பார்வை, கேள்வி, உணர்வு போன்ற எல்லா புலன்களையும் தந்தவன்தான் அல்லாஹ். ''உங்களுடைய தாய்மார்களின் வயிறுகளிலிருந்து, நீங்கள் ஒன்றுமே அறியாதவர்களாக இருந்த நிலையில் அல்லாஹ் தான் உங்களை வெளிப்படுத்துகிறான். மேலும், உங்களுக்கு செவிப்புலனையும், பார்வையையும் இதயங்களையும் நீங்கள் நன்றி செலுத்துவேண்டுமென்பதற்காக அவனே அமைத்தான்.'' அல்குர்ஆன் (16:78)

வானில் பறவைகளை பறக்கச் செய்பவன் அல்லாஹ்

கூட்டம் கூட்டமாக வரிசை வரிசையாக பறவைகள் வானில் பறந்து செல்கின்ற அற்புதமான காட்சியைப் பார்க்கின்றோம். அவை பறப்பதற்குதிய ஆற்றலை வழங்கியவன்தான் அல்லாஹ்.

''வான்மண்டலத்தில் காற்று வெளியில் இறைக்கட்டளைக்கு கட்டுப்பட்டவையாக பறந்து செல்லும் பறவைகளை இவர்கள் பார்க்கவில்லையா? அவற்றை ஆகாயத்தில் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் தடுத்து நிறுத்தவில்லை. நிச்சயமாக இதில் நம்பிக்கை கொண்ட மக்களுக்குத் தக்க அத்தாட்சிகள் இருக்கின்றன.''

அல்குர்ஆன் (16:79)

''இறக்கைகளை விரித்துக் கொண்டும் இவர்களுக்கு மேல் வானில் பறக்கும் பறவைகளை இவர்கள் பார்க்கவில்லையா? அளவற்ற அருளாளனைத்தவிர வேறுயாரும் கீழே விழாமல் அவற்றைத் தடுக்கக்கொண்டிருக்கவில்லை. அவன் ஒவ்வொரு பொருளையும் நோட்டமிடுபவன்.'' அல்குர்ஆன் (67:19)

நிழலை படைத்தவன் அல்லாஹ்

கடுமையான சூரிய வெப்பத்தின் போது, மரங்களின் அடியில் ஒதுங்கி அதன் நிழலில் தஞ்சமடைகிறோம். இந்த நிழலை ஏற்படுத்தியவன்தான் அல்லாஹ். தான் படைத்துள்ளவற்றிலிருந்து

உங்களுக்கு நிழல்களையும் ஏற்படுத்தினான்." அல்குர்ஆன் (16:81)

மனிதன் வசிக்குமிடமாக மலைகளைப் படைத்தவன் அல்லாஹ்

மிகவும் உயரமான மலைகளில் கூட மனிதன் வசிப்பதற்குத் தேவையான சுனை நீர்களை ஏற்படுத்தி வாழும் இடமாகவும் வசப்படுத்தித் தந்தவன்தான் அல்லாஹ். "இன்னும் மலைகளிலிருந்து உங்களுக்கு தங்குமிடங்களாக குகைகளையும் ஏற்படுத்தினான்."

அல்குர்ஆன் (16:81)

காலச்சூழ்நிலைக் கேற்ற ஆடையைத் தந்தவன் அல்லாஹ்

கோடைக்காலத்தில் மனிதன் ஆடை அணிய பஞ்சு, பருத்தி வகைகளையும் குளிர்காலத்தில் அணிவதற்கு தேவையான கம்பளி போன்றவைகளையும் உருவாக்கித் தந்தவன்தான் அல்லாஹ்.

"இன்னும் வெப்பத்திலிருந்து உங்களைப் பாதுகாக்கக் கூடிய சட்டைகளையும், உங்களுடைய போரில் உங்களைப் பாதுகாக்கக் கூடிய கவசங்களையும் உங்களுக்காக அமைத்தான். அல்லாஹ்வுக்கே முற்றிலும் வழிப்பட்டு நடப்பதற்காக இவ்வாறு தன் அருட்கொடையை உங்களுக்கு பூர்த்தியாக்குகிறான்." அல்குர்ஆன் (16:81)

நினைத்ததை முடிப்பவன் அல்லாஹ்

அவன் என்ன நினைக்கின்றானோ அதைச் செய்து முடிக்கின்ற ஆற்றல் மிக்கவன்தான் அல்லாஹ். எந்த சக்தியும் அவனைத் தடுத்து, நிறுத்திவிட முடியாது. "அல்லாஹ் எப்பொருளையாவது படைக்க நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் 'ஆகுக' என்று கூறுவது தான். உடனே அது ஆகிவிடும்".

அல்குர்ஆன் (36:82)

"அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றல் மிக்கவன்"

"அல்லாஹ் தான் நாடியதை செய்து முடிப்பவன்".

அல்குர்ஆன் (85:16)

மக்கிய எலும்பையும் உயிர்ப்பிப்பவன் அல்லாஹ்

மனிதன் மரித்த பின்பு மண்ணில் புதைக்கப்பட்டு மக்கி, உக்கிப்போன அவனது உடலை மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பக் கூடியவன்தான் அல்லாஹ். “மனிதன், தான் படைக்கப்பட்டது எப்படி என்பதை மறந்து விட்டு, அவன் நமக்காக ஓர் உதாரணத்தையும் கூறுகிறான். மக்கிப்போன நிலையில் உள்ள எலும்புகளை உயிர்ப்பிப்பது யார்? என அவன் கேட்கிறான். முதல் முறையில் அவனை உண்டு பண்ணியவனே, பின்னும் அவற்றுக்கு உயிர் கொடுப்பான்.” அல்குர்ஆன் (36:78.79)

இரவை ஆடையாக்கிவன் அல்லாஹ்

இரவு நேரத்தை மறைவானதாகவும் ஓய்வு எடுப்பதற்கு வசதியாகவும் ஆக்கித்தந்தவன்தான் அல்லாஹ்.

“அல்லாஹ்தான் உங்களுக்கு இரவை ஆடையாகவும், நித்திரையை இளைப்பாறுதலாகவும் ஆக்கியிருக்கின்றான். இன்னும், அவனே பகலை உழைப்பிற்கு ஏற்றவாறு மீண்டு எழுவதற்காக ஆக்கியிருக்கின்றான்.” அல்குர்ஆன் (25:47)

இரு கடல்களுக்கிடையே திரையை ஏற்படுத்தியவன் அல்லாஹ்

ஒன்றாகக் காட்சிதரும் கடலிலே ஒரு பகுதி சுவையான நீராகவும், இன்னொரு பகுதியை உப்பு நீராகவும் ஆக்கி, இரண்டிற்கு மிடையில் எவ்வித திரையுமில்லாமல் ஏற்படுத்தியவன்தான் அல்லாஹ்.

“அல்லாஹ்தான் இருகடல்களையும் ஒன்று சேர்த்தான். அதில் ஒன்று மிக்க இனிமையும், சுவையுமுள்ளதாகவும், மற்றொன்று உப்பும், கசப்புமானதாகவும் இருக்கிறது. இவ்விரண்டிற்குமிடையே ஒரு திரையையும், மீறமுடியாத ஒரு தடையையும் ஏற்படுத்தியிருக்கிறான்.”

அல்குர்ஆன் (25:53)

“அல்லாஹ்வே இரண்டு கடல்களையும் ஒன்றோடு ஒன்று சந்திக்கச் செய்தான். அவற்றிற்கிடையே ஒரு தடுப்பு இருக்கிறது. அதை அவ்விரண்டும் மீறமுடியாது.” அல்குர்ஆன் (55:19.20)

விதைகளை வெடிக்கச் செய்தவன் அல்லாஹ்

கடுமையான நிலத்திலிருந்தும், மென்மையான விதைகளிலிருந்தும் வெளியாகும் இளம் தளிர்களை வெளியே கொண்டு வந்து முளைக்கச் செய்யக்கூடியவன்தான் அல்லாஹ்.

“நிச்சயமாக அல்லாஹ்தான் விதைகளையும், கொட்டைகளையும வெடித்து முளைக்கச் செய்பவன். இறந்ததிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகிறான். உயிருள்ளதிலிருந்து இறந்ததையும் அவனே வெளிப்படுத்துகிறான். அவனே அல்லாஹ். நீங்கள் எப்படி திசைதிருப்பப்படுகிறீர்கள்?” அல்குர்ஆன் (6:95)

தானியங்களை முளைக்கச் செய்பவன் அல்லாஹ்

விதவிதமான நவதானியங்களை மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையாகப் பயன்படுத்துகின்றனர். இவற்றை பூமியில் முளைக்கச் செய்து மனித பயன்பாட்டிற்காக உற்பத்தி செய்து கொடுப்பவன்தான் அல்லாஹ்.

“பூமியில் நீங்கள் விதைப்பதைக் கவனித்தீர்களா? அதை நீங்கள் முளைக்கச் செய்கிறீர்களா அல்லது நாம் முளைக்கச் செய்கிறோமா? நாம் நாடினால் திட்டமாக அதனைக் கூளாக்கிவிடுவோம். பின்னர் நீங்கள் ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருப்பீர்கள்.” அல்குர்ஆன் (56:64)

பச்சைமரத்திலிருந்து எரிபொருள் தந்தவன் அல்லாஹ்

“நீங்கள் மூட்டும் நெருப்பை கவனித்தீர்களா? அதன் மரத்தை நீங்கள் உண்டாக்கினீர்காளா? அல்லது நாம் உண்டு பண்ணுகிறோமா? நாம் அதனை நினைவூட்டாகவும் பயணிகளுக்கு பயனளிப்பதற்காகவும் உண்டாக்கினோம். எனவே மகத்தான உம் இறைவனின் திருநாமத்ததைக்கொண்டு அவனை துதிப்பீராக!”

அல்குர்ஆன் (56:71.72.73)

பார்வைகளுக்கு அப்பாற்பட்டவன் அல்லாஹ்

அல்லாஹ்வை யாரும் பார்த்ததில்லை. உலகில் யாராலும் அவனைப் பார்க்கமுடியாது. அவனை பார்க்கக்கூடிய சக்தி மனிதனின் பலவீனமான கண்ணுக்கு இல்லை. எந்தப்பார்வையும் அவனை

அடையாது. அதே நேரத்தில் எல்லாவற்றையும் அவன் சூழ்ந்து அறிந்து கொண்டும் பார்த்தும் கொண்டும் இருக்கிறான். “பார்வைகள் அவனை அடைய முடியாது. ஆனால், அவனோ எல்லாருடைய பார்வைகளையும் அடைகிறான். அவன் நுட்பமானவன். நன்கு அறிகின்றவன்.” அல்குர்ஆன் (6:103)

நட்சத்திரங்களை வழிகாட்டியாக ஆக்கியவன் அல்லாஹ்

வானத்தில் இலங்கிக் கொண்டிருக்கும் எண்ணற்ற நட்சத்திரங்களைப் படைத்தவன்தான் அல்லாஹ். “அல்லாஹ்வே உங்களுக்காக நட்சத்திரங்களை அவற்றைக் கொண்டு கரையிலும் கடலிலும் உள்ள இருள்களில் நீங்கள் வழியறிந்து செல்வதற்காக உண்டாக்கினான். அறியக்கூடிய மக்களுக்கு நிச்சயம் நம் வசனங்களை நாம் விவரிக்கிறோம்.” அல்குர்ஆன் (6:97)

ஒளிமயமானவன் அல்லாஹ்

ஒளியைப் போன்று பரவி வியாபித்து எல்லாவற்றையும் சூழ்ந்து அறிந்து கொண்டிருப்பவன் தான் அல்லாஹ். “வானங்கள், பூமி ஆகியவற்றின் ஒளியாக இருக்கிறான். அவனுடைய ஒளிக்கு உதாரணம் ஒரு மாடத்தைப் போன்று இருக்கிறது. அதில் ஒரு விளக்கு இருக்கிறது. அக்கண்ணாடி ஒளிவீசும் நட்சத்திரத்தைப் போன்றதாகும்.

அது பாக்கியம் பெற்ற ஸைத்தூன் மரத்தின் எண்ணையினால் எரிக்கப்படுகிறது. அது கீழ்த்திசையை சார்ந்ததுமல்ல. மேல் திசையைச் சேர்ந்ததுமல்ல. அதனை நெருப்பு தீண்டாவிட்டாலும் அதன் எண்ணை ஒளிவீச முற்படும். இவையெல்லாம் சேர்ந்து ஒளிக்குமேல் ஒளியாகும். அல்லாஹ்தான் நாடியவரை தன்னுடைய ஒளி என்னும் சத்திய பாதையின் பக்கம் நடத்திச் செல்கிறான்.” அல்குர்ஆன் (24:35)

அனைத்தையும் சூழ்ந்தறிபவன் அல்லாஹ்

அனைத்து மனிதர்களின் உள்ளங்களில் உள்ளவற்றையும், மனிதன் தன் கண்சாடையை எதற்காகச் செய்கிறான் என்பதையும் அறிகின்ற ஆற்றல் உள்ளவன்தான் அல்லாஹ்.

“கண்கள் செய்யும் மோசத்தையும் உள்ளங்கள் மறைத்து வைப்பதையும் அவன் நன்கு அறிகிறான்.” அல்குர்ஆன் (40:19)

இறைவன் அனுமதியின்றி எந்தப்பெண்ணும் கருத்தரிப்பதில்லை

“அல்லாஹ்தான் உங்களை முதலில் மண்ணால் படைத்தான். பின்னர் ஒருதுளி இந்திரியத்திலிருந்து பின் அவன் உங்களை ஆண்-பெண் ஜோடியாக ஆக்கினான். அவனுடைய அறிவுக்குத் தெரியாமல் எந்தப் பெண்ணும் கர்ப்பம் தரிப்பதில்லை. பிரசவிப்பதுமில்லை. இவ்வாறேவயதானவரின் வயது அதிகமாக்கப் படுவதும், அவருடைய வயதிலிருந்து குறைக்கப்படுவதும் ஏட்டில் எழுதப்படாமலில்லை. நிச்சயமாக, இது அல்லாஹ்வுக்கு எளிதானதாகும்.” அல்குர்ஆன் (35:11)

துன்பத்தின் போது அழைக்கப்படுபவன் அல்லாஹ்

மனிதனுக்கு என்ன துன்பங்கள் ஏற்பட்டாலும் அழைத்தால் உடனே பதில் கொடுப்பவன்தான் அல்லாஹ்.

“துன்பத்திற்குள்ளானவன் அவனை அழைத்தால், அவனுக்கு பதில் கொடுத்து, அவன் துன்பத்தை நீக்குபவனும், உங்களை இப்பூமியில் பின் தோன்றல்களாக ஆக்கியவனும் யார்? (அவன்தான் அல்லாஹ்; அல்லாஹ்வோடு வேறு கடவுளா? இல்லை, என்றாலும்) இவற்றைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்ப்பது மிகவும் குறைவாகும்.”

அல்குர்ஆன் (27:62)

அக்கிரமக்காரர்களை அழிப்பவன் அல்லாஹ்

படைத்த இறைவனை மறந்து வாழ்ந்து, இறைத்தூதர்களுக்கு மாறு செய்து, அக்கிரமங்களிலும் அநியாயங்களிலும் ஈடுபட்டு, பூமியில் குழப்பங்களையும் கொந்தளிப்புகளையும் ஏற்படச் செய்து, அமைதியைக் கெடுத்த அநியாயக்காரர்களை அழிப்பவன்தான் அல்லாஹ். “அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்திருக்கின்றோம் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? நாம் உங்களுக்குச் செய்து தராத வசதிகளையெல்லாம் பூமியில் அவர்களுக்கு செய்து கொடுத்தோம். அவர்கள் மீது நாம் வானத்தை தொடர்ந்து மழை பெய்யுமாறு செய்தோம். அவர்களுக்குக் கீழே ஆறுகள் ஓடும்படி செய்தோம். பிறகு, அவர்களின் பாவங்களின் காரணத்தினால் அவர்களை அழித்துவிட்டோம். அவர்களுக்கு பின்

வேறு தலைமுறையினரை நாம் உண்டாக்கினோம்.”

அல்குர்ஆன் (6:6)

“இவ்வாறே நாம் ஒவ்வொருவரையும் அவரவரின் பாவத்தின் காரணமாகப் பிடித்தோம். அவர்களில் சிலர் மீது கடும்புயல் மூலமாக கல்மாரியை அனுப்பினோம். மேலும், அவர்களில் சிலரை பேரிடி முழக்கம் பிடித்துக் கொண்டது. மேலும், அவர்களில் சிலரைப் பூமியினுள் புதையச் செய்தோம். மேலும், அவர்களில் சிலரை மூழ்கடித்தோம். அல்லாஹ் அவர்களுக்கு அநியாயம் செய்யக் கூடியவனாக இல்லை. ஆனால், அவர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொண்டார்கள்.” அல்குர்ஆன் (29:40)

பாவிகளை மன்னிப்பவன் அல்லாஹ்

பாவமான காரியங்களில் ஈடுபட்டு இறைவனுக்கு மாறு செய்து; அவனுக்கு கட்டுப்படாமல் வாழ்ந்த மக்கள் தங்கள், தவறுகளுக்காக வருந்தி இறைவனிடத்தில் பாவமன்னிப்பு வேண்டுபவர்களின் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னிப்பவன்தான் அல்லாஹ். “அளவு கடந்து பாவங்கள் செய்து வரம்பு மீறிவிட்ட என்னுடைய அடியார்களே! அல்லாஹ்வுடைய அருளை விட்டும், நீங்கள் நிராசையாகி விடவேண்டாம். “நிச்சயமாக, அல்லாஹ் பாவங்கள் யாவற்றையும் மன்னிப்பான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன் மிக்க கருணையுடையவன் என்று கூறுவீராக!” அல்குர்ஆன் (39:53)

நல்லவர்களுக்கு மறுமையில் சொர்க்கத்தை வழங்குபவன் அல்லாஹ்

உலகில் இறைவனுக்குக் கட்டுப்பட்டு, துன்பம் வரும்போது பொறுமை காத்து, நற்செயல்கள் புரிந்து நல்லவர்களாக வாழ்ந்து மடிந்தவர்களுக்கு மறுமையில் ‘சொர்க்கம்’ என்னும் பெரும்பாக்கியத்தையும் வழங்கக்கூடியவன்தான் அல்லாஹ். “நிச்சயமாக, எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்து வாழ்ந்தார்களோ அவர்களுக்கு ஃபிர்தவ்ஸ் என்னும் சொர்க்கங்கள் தங்குமிடமாக இருக்கும். அதிலே அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக இருப்பார்கள். அதிலிருந்து அவர்கள் வேறிடம் செல்லவிரும்பமாட்டார்கள்.” அல்குர்ஆன் (18:107)

தீயவர்களுக்கு நரகத்தைக் கொடுப்பவன் அல்லாஹ்

“யார் இறைவனை ஏற்க மறுத்து, நம் வசனங்களை பொய்ப்பித்தார்களோ அவர்கள் நரகவாசிகள். அவர்கள், அந்த நரகத்தில் என்றென்றும் நிலைத்திருப்பார்கள்.” அல்குர்ஆன் (2:39)

“நிச்சயமாக நிராகரிப்போராகிய வேதக்காரர்களும், இணைவைப்பாளர்களும் நரக நெருப்பில் இருப்பார்கள். அதில் நிரந்தரமாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தாம் படைப்புகளில் மிகவும் கெட்டவர்கள் ஆவார்கள்.” அல்குர்ஆன் (98:6)

நித்திய ஜீவன்; அழிவில்லாதவன் அல்லாஹ்

இறைவனால் படைக்கப்பட்ட எல்லாம் ஒருநாள் அழிந்து போய்விடும். படைத்தவன் மட்டும் அழியாமல் எஞ்சியிருப்பான். அவன் தான் அல்லாஹ்.

“அல்லாஹ், அவனே இறைவன். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன். என்றென்றும் நிலைத்திருப்பவன். அவனை உறக்கமோ, சிறு தூக்கமோ பிடிக்காது. வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும் அவனுக்கே உரியன. அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்யமுடியும்? அவர்களுக்கு முன்னுள்ளவற்றையும், அவர்களுக்கு பின்னுள்ளவற்றையும் அவன் அறிவான். அவன் ஞானத்திலிருந்து அவன் நாடியதைத் தவிர வேறு எதனையும அவர்கள் அறிந்து கொள்ளமுடியாது. அவனுடைய சிம்மாசனம் வானங்கள் பூமியைவிட விசாலமாக உள்ளது. அவ்விரண்டையும் படைப்பது, அவனுக்கு சிரமத்தை உண்டாக்குவதில்லை. அவன் மிக உயர்ந்தவன். மகிமைமிக்கவன்.”

அல்குர்ஆன் (2:555)

மறுமையில் எல்லோரையும் ஒன்று சேர்ப்பவன் அல்லாஹ்

உலகம் தோன்றிய நாள்முதல் உலகம் அழியும் நாள் வரை உள்ள எல்லா மனிதர்களையும், மறுமையில் ஒன்று திரட்டக் கூடியவன்தான்

அல்லாஹ். “எக்காளம் (சூர்) ஊதப்பட்டதும் உடனே அவர்கள் தங்கள் சமாதிகளிலிருந்து வெளிப்பட்டு தங்கள் இறைவனிடம் விரைவார்கள். எங்களுடைய கைசேதமே! எங்கள் தங்குமிடங்களிலிருந்து எங்களை எழுப்பியவர்கள் யார்? என்று அவர்கள் கேட்பார்கள். அளவற்ற அருளாளன் வாக்களித்ததும், அவனுடைய தூதர்கள் உண்மையெனக் கூறியதும் இதுதான்; என்று அவர்களுக்கு கூறப்படும்.” (36:51)

“அவர்கள் எல்லாரையும் அந்த மறுமை நாளில் நாம் ஒன்று திரட்டுவோம். பின்னர் நமக்கு இணைவைத்தவர்களை நோக்கி, ‘நீங்கள் தெய்வங்களென எண்ணிக் கொண்டிருந்த உங்களுடைய அந்த கூட்டாளிகள் எங்கே?’ என்று கேட்போம்.” அல்குர்ஆன் (6:22)

இப்போது சிந்தியுங்கள் மனிதர்களே!

அன்புள்ள வாசகர்களே! அல்லாஹ் என்பவன் யார் என்பதை ஓர் அளவு தெரிந்து கொண்டீர்கள். நீங்கள் யாரை, எதை கடவுளாக நம்பி வழிபடுகிறீர்களோ, அவற்றிடம் இந்த பண்புகளெல்லாம் இருக்கிறதா அல்லது இந்த பண்புகளில் ஒரு சிலதாவது இருக்கிறதா என்று ஆராய்ந்து பாருங்கள். நிச்சயம் இல்லை என்று அடித்துச் சொல்வீர்கள். அப்படியானால் அவையெல்லாம் கடவுளாக-வணக்கத்திற்குரியவையாக இருக்க தகுதியற்றவை என்பதை நம்புங்கள். இந்த பண்புகளெல்லாம் ஒருங்கே அமைந்து இருக்கின்ற நம்மையெல்லாம் படைத்த ஏக இறைவனாம் அல்லாஹ்வை மட்டும் படைத்த இறைவனாக மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போது நீங்கள் வெற்றி பெறுவீர்கள். மறுமையில் ‘சொர்க்கம்‘ என்ற பேரின்பத்தை அடைவீர்கள் நிச்சயமாக அல்லாஹ்வே உண்மையான இறைவனாவான். அவனையன்றி அவர்கள் பிரார்த்திப்பவையாவும் அசத்தியமானவை. மேலும், நிச்சயமாக அல்லாஹ்வே உயர்ந்தவன். மகா பெரியவன்.”

அல்குர்ஆன் (31:30)

“அவன்தான் உங்களுடைய இறைவனாகிய அல்லாஹ்! அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவனே எல்லாப் பொருட்களின் படைப்பாளன் ஆவான். ஆகவே, அவன் ஒருவனையே வணங்கி வழிபடுங்கள். இன்னும் அவனே ஒவ்வொரு பொருளின் மீதும் பொறுப்பாளன் ஆவான்.” அல்குர்ஆன் (6:102)